The Rt.Honble Company, Lords Proprietors of this Place, expecting by their constituting a Corporation, an

---

1. The Town Hall, by the Choultry Gate
2. P.C.Vol.XIV. 29th Oct., 1688
3. Shoars, Sewers
4. P.C. Vol.XV.12th August, 1689.
5.

advantage and benefit both to themselves and the place, as also the erecting a Town Hall, School House, Hospital, walling the Citty, &C., none whereof are yet done, or anything towards it, or designed that I know of; I therefore in the Rt.Hon'ble Companys name and for their Account, require you to restore their revenues of measuring and weighting, & C., dutys to them as formerly, as also what you have receiv'd on those Accounts; since, if they are not benefitted, there is no reason they should be loosers by the Corporation'.(P.C.,Vol.XVII; 27th March 1691)

The Mayor, Mr.Thomas Wavell, remarked in reply that, while the revenues had been assigned by the Council, it was the President alone who proposed to withdraw them.

Yale had quarrelled with his coolegues, and as the Mayor and some of the Aldermen were members of the Council it is not surprising that the differences between the President and the Mayor's Court soon became acute. Under the charter there was a right of appeal from the Mayor's Court to the Court of Admiralty.[1] When Sir John Biggs died in 1689 the Court of Admiralty was declared extinct, and the Mayor's Court held the opinion that its own decisions were now final. Yale thought differently, and on two occasions he forcibly released native debtors from prison. On the 7th September, 1691, the Mayor[2] and Aldermen expostulated in vigorous terms:-

The Mayor and Aldermen to the President and Governor.

'.....To our Amazement we are again alarmed by the same Practices, our Jaylor complaining Your Honour threatned him with Corporall punishment for refusing to sett att liberty Collowa Chettee, who was legally committed for his insufferable contempt of our Authority, and Scared him into complyance by your Scandlous paper of the

---

1. P.C., Vol.XVII, 7th Sept.1691. The Supreme Court was generally styled the Court of Admiralty.'

2. The Mayor, Mr.William Fraser.

2d Instant..... Tis the constitution of all good Government for the Millatary to Support the Civil, and both to unite: but since Your Honour is resolved to Sett one in Opposition against the other, We are obliged to declare you, the Honble Elihu Yale, Esq.'., President and Governor of this place, answerable for all damages that have or may hereafter accrew to any Person by your unwarrantable forceing men from the hands of Justice.
WILLIAM PRASER, THO.GRAY, D.CHARDIN, BARTH, RODRIGUES, HENRY ALFORE, JOHN AFFLACK, CHARLES METCALF, SYMON HOLCOMB' (P.C.Vol.XVII., 7th Sept., 1691)

'The Presidents Answer to the Worshipfull Mayor,&C., paper.

'.....I am sorry to see soe many sober men Seduct from their respects and reason by some factious (I wish I may not say Mutinous) people among you against me and the Government to sine so erronious and Scurrilous a paper as I this day received from you by the register;[1] but I am willing to believe those persons imposed upon by ficticious Storyes, or have err'd into it by their misunderstandings, the buisness of your Coart being managed by a few bold undertakers that either impose upon or mislead the rest.....

'I shall now answer your libellous paper, for I can tearm it no other, it containing so much reflections and little of truth.....

'And whereas you unjustly charge me with intrenching upon your priveledges by releaceing Wassalinga, a poor miserable wretch that, by the cruielty of Mr.Bridger, bath been close confin'd for debt near 12 months till he almost perisht with hunger and sickness, without either care or relief from his merciless Creditor; which the Martiall often passionately acquointing

---

1. The register, the Register'

me with, I confess I ordered his remove to his house for his recovery, but with this caution, that he was not to leave the Town, but to be always ready upon demand...[1]

Your next complaint is from the same justice and reason as the former, which, that the Rt.Hon'ble Company may Judge of, I shall faithfully report, viz. On Wednesday last hundreds of the Cast and relations of Collawa Chettee, an eminent Merchant of the Hon'ble Company, (represented that he) had been long confind and, as your Jaylor told me, without either crime, action, or warrant, and that he had eat nothing for two days, by which he was much indisposed and Sick; and all this severity for no other reason that I hear then his refusing to signe an Arbitration Paper on an old intricate difference he was Voluntarily employ'd, in declaring he could not Signe his opinion of it, not being satisfied therein or rightly understanding it, the Accounts being not intelligible of about 40 years standing; when, upon the pittifull importunities of his friends, and in commiseration of the prisoner, takeing the Security of two able Merchants in a 1000 Pagodas for his return within two hours, I wrote an Order to the Jaylor to permit his goeing to eat after the ceremonys of his Cast, and not let him Starve in prison. Which accordingly was granted him, and he complyed with (and this your Judicious civilitys miscall a Scandall). But notwithstanding, the next day your Officer came to him in prison, laying rude hands and threats upon him, saying he came by the Mayor Mr.Frasers order to tell him he must either Signe the Arbitration paper he sent him or that he should continue and Starve in prison; which terrible menaces affrightned the Sick man into a Complyance to save his life and get his freedome. However, the noise of the Severity Spred so much among

1. Yale here mentions a Company's order that debtors who can show they are worth less than 12 pages shall be released.

the Inhabitants that thousands of them came to mewith complaints of it, bringing a petition to me and Councill, which I now send you translated, by which you may Judge of the satisfaction and encouragement your proceedings give the inhabitants, in so much that, if these oppressions are not Redrest, we are likely to loose a great part of the towns people......And so I leave the Honble Companys Motto for your consideration and practice, Vz., Non Minusest Virtus quam quaerere parta Tueri. . .[1] Your very Loveing friend, ELIHU YALE'. (P.C.Vol.XVII, 7th Sept., 1691)

Writing in January, 1692, the Company allude[2] with disapproval to the fact that there were in 1690 as many as eight English Aldermen. They desire that most of the Aldermen may consist of the heads of the Several foreigne Caste, vizt., One Armenian, One or two Hebrews, one or two Portugueze, and one or two Gentues, and one Moore, if you have a sufficient number of the Cast which have their proper Head of Chief.'

- -

1. Yale then cautions the Court against attempting to appoint Justices of the Choultry, which is the function of Government. He ends by requiring the restoration of the taxes which had been assigned to the Court as revenue.

2. Let. Bk., Vol.IX., 22nd Jan., 1692.

[Excerpts from the "Vestiges of old Madras"]

TIT BITS

PALAIYAM, PALAIYAGAR, ZEMINDAR

A Palaiyam was a Subordinate feudal Estate the tenure of which was one of military service, The Holder of this was termed a Palaiyagar. more commonly a Poligar. The tenure has ceased to exist, and the Poligar of the present day is merely the holder of on Estate paying a favourable rent to Government. Except in name there is no real difference between him and the ordinary Zemindar.

Source: Private Diary of Ananda Ranga Pillai

THE WORD"INDIAN" upto 1912 !!

His Excellency the Governor in Council observes that the word "Indian"has of late years been generally adopted in Official Correspondence, reports and returns in view of the word "Native" and the Government now think it desirable definitely to direct that the word "Indian" shall be used instead of "Native" in all Official papers, whenever the sense desired can be equally clearly conveyed by the use of either term. In certain contexts, it will not perhaps be possible to avoid the use of the word "Native" e.g. in the phrases "Native States", "Statutory Native of India" and the like, and in such circumstances in which the sue of the word "Native" is not open to reasonable objection it may continue.

By M.Gopalakrishnan,
Asst.Commissioner(Rtd.,)

From the G.O.No.1510, Public,
dated 16.12.1912.

******

DO YOU KNOW ?

The Indian Historical Records Commission was set up by the Government of India in 1919 as a consulting advisory body whose opinion would carry weight with the Public and which could make certain recommendations in regard to the following:

Treatment of Archives for historical Study etc

The Record Management Committee was constituted by the Government of India early in 1975 in pursuance of Resolution III passed at the 43rd Session of the Indian Historical Records Commission held at Lucknow on the 28th and 29th January, 1975.

CERTAIN OLD RECORDS CONSULTATION

Consultations comprising a full record of the formal consultations of the President and Council at Madras from the year 1672.

General letters

There are exchanged between the Government of Madras and the Board of Directors in England.

Those "To England" contain full information respecting the affairs of the Madras Presidency and those "From England" contain instructions of the Board of Directors and its orders.

Country Correspondence:

These contain all Correspondence which passed between Military and Political Department with the Native Powers from 1753 to 1829

Special Correspondence and Minutes

These contain correspondence with the French on wars with Tippu, Land Settlement of Bengal, Bihar and Orissa, Poligar wars etc.

Special consultations

These refer to special occurrences which are of historical value.

Dutch Records

These are 1782 volumes and 67 bundles of Dutch Records. They relate to Cochin and Coromandel Coast dealing with the relations of the Dutch with the country powers in Malabar and their correspondence with Batavia and Colombo

Danish Records

These cover the period from 1777 to 1845. They consist of title deeds, accounts, letter books, Court Martial books, Garrison order books, Military Protocols, Legacy letters, Regulations etc.

Persian Records

These were received from the Office of the paymaster of carnatic Stipends and also relate to the Office of the Receiver of Carnatic Property.

Mahratti Records

The Modi and Mahratti records of the old Tanjore Raj relate to the British agency or Residency established at Tanjore on the cession of the territory to the British by the Rajah of Tanjore in 1799.

Compiled By:
M.Gopalakrishnan

****

AVANA AMUTHAM

List of Books Received by Tamil Nadu Archives Library during 1.4.87 - 30.6.1987.

Sl. No.	Author	Title	Library Reg.No.
1.	S.Periyanayaki	Role of the Justice Party in Madras Legislative Assembly 1937-39 (Thesis)	682/87
2.	Shungoonny Menon	History of Travancore 1983	746/87
3.	..	Kerala District Gazetteers Trichur (Supplement) 1981	747/87
4.	R.Nagasamy	Tamil coins: A study 1981	750/87
5.	கு.தாமோதரன்	மாமன்னன் முதலாம் இராசராசன் ஒரு பார்வை 1984.	751/87
6.	-do-	வரலாற்றில் தஞ்சை 1984	752/87
7.	நடன காசிநாதன்	இராசராசேச்சுரம்	753/87
8.	சா.கணேசன்	இராசராசன்	754/87
9.	..	Tamil Nadu State Administration Report 1984-85	796/87
10.	..	தமிழ்நாடு மாநில ஆட்சி அறிக்கை 1984-85	797/87
11.	ல.சின்னசாமிநாயுடு	ஆண்டாள் திருக்கல்யாணம் 1981	798/87
12.	"	ஆத்ம ரக்ஷம்ருதரஹஸ்யம் 1983	799/87
13.	"	அஹிம்சா பரமோதர்மம் 1986	800/87
14.	Y.A.S.Reddy	Agrarian relations in the ceded districts of Madras Presidency 1800-1857(Thesis)	802/87
15.	கழிஞ்சூர் செல்வராஜ்	கலைவாணர் என்.எஸ்.கே.	803/87

Sl. No.	Author	Title	Library Reg.No.
16.	Dr.C.Venkatesan	History of Prison Administration in the Madras Presidency 1919-1939(Thesis)	805/87
17.	P.Natarajan	Biography of Raja Desing (Thesis)	826/87
18.	..	Annual report of the National Archives of India 1985	827/87
19.	ரகமி	வீரவாஞ்சி	838/87
20.		Madras Medical College Post Centenary Golden Jubilee year	841/87
21.		Report on Public Instruction 1975-76	846/87
22.		Working papers from Madras Institute of Development Studies.	
23.		Tamil Nadu Legislative Assembly and Council debates	
24.		District wise Taluk profile of Irrigation statistics	
25.		Central Government Budget documents 1986-87	
26.		Tamil Nadu Government Budget Publications.	

Sl. No.	Author	Title	Library Reg. No.
1.	பெ.சு.மணி	பாரதியாரும் சமூக சீர்திருத்தமும்	876/87
2.	"	சங்க கால ஔவையாரும் உலகப் பெண்பாற் புலவர்களும்	877/87
3.	"	வீரமுரசு சுப்ரமணிய சிவா	878/87
4.	சுப்பிரமணிய பாரதி	பொன்வால் நரி	879/87
5.	பெ.சு.மணி	வ.வே.சு.ஐயர் கட்டுரைகள்(தொகுப்பு	880/87
6.	"	தடைகளை வென்று தலைமை பெற்ற ம.பொ.சி	881/87
7.	அறிவழகன்	குற்றவாளிகள்	894/87
8.	"	பயணம்	895/87
9.	MIZU SHIMA TSUKASA	Nattar and the socio economic change in South India in the 18th-19th centuries 1986.	900/87
10.	P.R. நரசிம்மன்	வைணவமரபும் மெய்ப்பொருளியலும்	901/87
11.	துறை சுந்தரேசன்	தமிழ் ஆட்சிமொழி ஒரு வரலாற்று நோக்கு	902/87
12.	Lt.Col.J.R.Daniel	The Black Pom Poms: History of the Madras Regiment 1941-1983	
13.	Dr.N.Venkataramayya	History of the Freedom Movement in India: Bibliographical list	963/87
14.	P.N.Radhakrishnan (Donor)	Indian Calendar	966/87
15.		Guide to the records: State Archives of West Bengal Part I & II	970/87
16.	T.Meimozhi	Periyar E.V.Ramasamy and the Indian National Congress 1986 (Thesis)	974/87

Sl. No.	Author	Title	Library Reg.No.
17.	National Archives, New Delhi	Catalogue of Printed and Published maps	1008/87
18.	I.D.Asirvatham	The days that used to be	1016/87
19.	-do-	Eastward to	1018/87
20.	Govt.of Maharashtra	Catalogue of maps in the Bombay Archives Vol.III	1028/87
21.	District Gazetteers	of Punjab, Maharashtra & Rajastan.	
22.	Pondicherry Legislative Assembly Debates		
23.	Census of India 1981:	District hand books of Tamil Nadu	
24.	Districts employment	Office monthly nerrative reports (Tamil Nadu)	
25.	Tamil Nadu Legislative Assembly Debates.		

தமிழ்ப்பகுதி

என் நோக்கம்

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி
டாக்டர் உ.வே.சாமிநாதையர்.

'உங்களுடைய நோக்கம் என்ன?' என்று கேட்பது எளிது. அதற்கு உண்மையாக விடையளிப்பது அரிது. 'உங்களுடைய நோக்கத்தைப் பற்றிச் சிலவரிகள் எழுதுங்கள்' என்று கலைமகள் ஆசிரியர் விரும்பினார். 'என்னுடைய நோக்கத்தை அறிவதால் உண்டாகும் பயன் என்ன? பெரியோர்களுடைய நோக்கத்தை அறிந்து அதன்படி நடக்க முயன்றால் பயன் உண்டு' என்று எண்ணினேன். ஆனாலும் அன்பினால் அவர் கேட்டதற்கு ஒருவகையாக விடையளிக்கத் துணிந்து சிலவற்றை எழுதலானேன்.

என்னுடைய வாழ்வின் நோக்கமெல்லாம் பெரும்பாலும் தமிழின் தொடர்புடையதுதான். தமிழ் நூல்களை ஆழ்ந்து பயிலவேண்டும். பலமுறை பயின்றால்தான் உண்மை புலப்படும். முதலிலே கடினமாகத் தோற்றினாலும் பலகால் பயின்றால் வரவரத் தெளிவு உண்டாகும். ஒரு நூலிலுள்ள சொற்சுவை பொருட்சுவைகளை அநுபவித்துப் படிக்கவேண்டும். அவற்றைப் பிறரும் அறியும் வண்ணம் எளிய நடையில் எழுதவும் சொல்லவும் வேண்டும்.

பழைய நூல்களை நன்றாக ஆராய்ந்து உண்மைக் கருத்தை அறிய வேண்டும். தெரியாதவற்றைத் தெரிந்தவைாகக் காட்டலாகாது. அந்நூல்களைப் பாதுகாக்கவேண்டும். புதிய கருத்துக்களை அவற்றில் ஏற்றிவிடலாகாது. அவசியமல்லாத கருத்துக்களை மேற்கொண்டு நூலையோ உரையையோ எழுதிப் பிறரை வற்புறுத்தி மகிழச் செய்தல் நலமன்று. பழைய நூல்களிற் சொற்குற்றம் பொருட்குற்றம் இருப்பனவாகத் தோற்றினால் அங்ஙனம் அமைத்ததற்குக் காரணம் என்னவென்று ஆராயவேண்டும். நமக்கு விளங்காததனால் ஒன்றைக் குற்றமென்று துணிந்துவிடுவதால் ஒரு பயனும் இல்லை. நாமே நன்றாக அறிந்துவிட்டோமென்று மதித்து அயலாரைத் தாழ்வாக நினைத்தலும் பேசுதலும் கூடா. பிறர் எழுதியுள்ளவற்றை அவமதியாமல், அவற்றிலுள்ள குணமான பாகங்களை அறிந்து உபயோகிக்கவேண்டும்.

கற்றவர்களிடத்தில் முறையாகப் பாடங்கேட்க வேண்டும். கேட்டவற்றைச் சிந்தித்து முறையாகப் பாடம் சொல்லவேண்டும். அதைவிடப்பெரிய உபகாரம் வேறு இல்லை. எப்பொழுதும் படித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

முன்னோர் ஒழுகிவந்த முறையைப் பெரும்பாலும் பின்பற்றுதலே மன ஒருமைக்கு வழியாகும். புதுக்கொள்கைகள், புதிய மதங்கள், புதிய தெய்வ வழிபாடு முதலியவற்றை ஆராய்ச்சியின்றி மேற்கொண்டால் அவை நம் மன இயல்போடு பொருந்துவதற்குப் பல காலம் செல்லும்; ஜனங்களிடையே ஒற்றுமையும் கடைப்பிடியும் தவறிவிடும். பிற மதங்களையும் தெய்வங்களையும் தூஷித்தல் கூடாது. அயல் மதக்கொள்கைகளையும் வேறு பாஷையிலுள்ள அரிய செய்திகளையும் அறிந்துவைத்தல் அறிவை விரிவுறச் செய்யும்.

எந்தச் சமயத்தாரோடும் எந்தத் தேசத்தாரோடும் சகோதர பாவத்துடன் ஒற்றுமையாயிருந்து காலங்கழிக்கவேண்டும்.

மேற்கொண்ட காரியத்தைச் சிறிது சிறிதாகப் பலநாள் ஆராய்ந்து ஆராய்ந்து திருத்தமாக நிறைவேற்றவேண்டும். முயற்சியிடையே யாரேனும் அவமதித்தால் அதனைப் பொருட்படுத்தாமல் காரியத்தைச் செய்துவரவேண்டும். நம்முடைய மனமறிய நற்காரியத்தை மேற்கொண்டு கடமையைச் செய்து வந்தால் இறைவன் அருளால் முடிவில் நன்மையே கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. செய்யும் காரியத்தைப் பயனால் தெரிவிக்கவேண்டுமேயன்றித் தொடங்கியது முதல், 'இப்படிச் செய்தேன்; அப்படிச் செய்தேன்' என்று தாமே பாராட்டிப் பேசுதல் உயர்வன்று.

பிறர் செய்த குற்றத்தை மறந்துவிடுதலும் பலரிடையே எடுத்துக் கூறாமையும் நன்மை பயக்கும். சிறு உதவி செய்தாரையும் மறவாமல் என்றும் நன்றி பாராட்டுதலினின்றும் தவறலாகாது. மனிதனை மனிதனாகச் செய்வது நன்றியறிவேயாகும்.

முதியவர்கள் படியாதவர்களாயினும் அவர்களுடைய பழக்கம் நன்மைகளை உண்டாக்கும். திருவாவடுதுறை ஆதினகர்த்தராக விளங்கிய மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் இதனை அடிக்கடி வற்புறுத்திக் கூறுவார்கள்.

நன்மையும் தீமையும் கடவுளால் நம் வினைக்கேற்ப அமைந்தனவென்று எண்ணவேண்டும். ஆதலின் தீமை செய்தாரென்று நெஞ்சிற் பகையுற்று யாரையும் கடிதல் ஆகாது. தெய்வம் நன்மையையே உண்டாக்கும் என்ற நம்பிக்கை உறுதிப்படவேண்டும். அது பலவிதமான இடையூறுகளை எளிதில் வெல்லக் கூடிய வன்மையை அளிக்கும்.

....3

பெரியோர் வாயிலாகவும் அனுபவத்தினாலும் அமைந்த நோக்கங்கள் பலவற்றுள் இவை சில. இவற்றின்படி நடக்கவே நான் முயன்று வருகிறேன்.

"இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்"

-*-

கலைமகள், பவ வருடம் பங்குனி மாதம் (மார்ச்சு 1935)ல் வெளிவந்தது. டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்களின் நல்லுரைக்கோவை இரண்டாம் பாகத்தில் இடம் பெற்றது.

தொகுப்பு: குடந்தை சா.வேங்கடராமன்.

எழும்பூர் ஏட்டுக் களஞ்சியம்

தொகுப்பு: செந்தூர்பாண்டியன், ம
கண்காணிப்பாளர். (நிலை-பி)

(Vestiges of Old Madras) - நூலைத் தழுவி எழுதப்பட்டது)

ஆல்போல் தழைத்து வளர்ந்துள்ள தமிழ்நாடு ஆவணக்காப்பகம் முதலில் 1805இல்தான் துவக்கப்பட்டது. அன்று கிழக்கிந்தியக் கம்பெனியாரின் வியாபாரத் தலைமையிடமாக இருந்த செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் மிகப் பிரதானமாக கருதப்பட்ட கோட்டைச் சதுக்கக் கட்டடத்தில் தனியே இரு அறைகளைக் கொண்ட இடத்தில் இயங்கத் தொடங்கியது. அப்போது ஒரேயொரு பதிவரைக் காப்பாளரையும், மூன்று எழுத்தர்களையுமே கொண்டு ஆரம்பிக்கப் பட்டது.

1826இல் இந்த ஆவண அறை பழைய 'விருந்துமண்டபம்' அதாவது 'நூன் கிடங்கு' என்றழைக்கப்பட்ட, அப்போது கவுன்சில் சேம்பர்ஸ் இயங்கிய இடத்துக்கு சில காரணங்களால் மாற்றப்பட்டது.

1888இல் கவுன்சில் சேம்பர்ஸிலிருந்து , ஆவணங்களை இப்போதுள்ள தலைமைச் செயலக கட்டட அடித்தளத்துக்கு மாற்றப்பட்டது. (அங்கிருந்த அரசு அச்சகம் தங்கசாலைக்கு மாற்றப்பட்டதன் விளைவாக) இதனைஇப்போது பொது ஆவண அலுவலகம் என்றழைக்கத் தொடங்கினர் (காரணம்: இந்த அலுவலகம் அனைத்துத் தலைமைச் செயலக துறைகளுக்கும் உரிய ஆவணங்களை வழங்கும் பணிகளைச் செய்து வந்ததே) இதன் நிர்வாகம் தலைமைச் செயலகத்துறையின் பொறுப்பில் அதன் ஓர் அங்கமாகவும் இருந்தது.

1902இல் எஸ்.ஜி.உறில் என்பவர் முக்கிய ஆவணங்களை காக்கும் கருத்தில் நிலையான ஆவணங்கள் என்ற பிரிவினை உருவாக்கி அவைகளை ஒருங்கிணைக்கும் முயற்சியில் வெற்றி கண்டார். இவர் அவ்வமயம் இந்திய அரசு ஆவணங்களின் பகுதிக்கு தலைவராக இருந்தார். அப்போது கர்ஸன் பிரபுவின் ஆட்சிக் காலமாகும். மத்திய அரசில் ஏற்பட்ட இந்த முன்னேற்றம் 1907இல் சென்னை அரசின் கவனத்துக்கு வந்தது. இதனால் ஆவணங்களை பாதுகாத்து வைக்க தனியே ஒரு கட்டடம் கட்டும் கருத்து ஏற்கப்பட்டு கட்டடம் கட்ட ஏற்பாடானது. இதில் தலைமைச் செயலகம் மட்டுமல்ல வருவாய் வாரியம் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆவணங்களையும்

....

ஒருங்கிணைக்கும் பணி துவக்கப்பட்டது. ரூ. 2½ லட்சம் செலவில் எழும்பூர் மேல் ஆஸ்லம் சாலையில் 1908இல் புதிய கட்டடம் கட்டப்பட்டது. அதுவே பின்பு காந்தி-இர்வின் சாலை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

1909இல் சென்னை ஆவணக்காப்பக அலுவலகம் தனித்து இயங்கத் தொடங்கியது. 1910இல் முழுநேர காப்பாளராக திரு ஹென்றி டாட்வெல் அவர்கள் சைதை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலிருந்து இக்காப்பகத்துக்கு நியமனம் ஆனார். இவரே முதல் காப்பாளர்.

1922இல் இவர் பணியினின்று ஓய்வு பெறும் பொருட்டு விடுப்பில் சென்றபோது, இவ்விடத்துக்கு வல்லுநர் யார் ஒருவரையும் நியமனம் செய்யவில்லை. ஆனால் தற்காலிகமாக ஒரு கண்காணிப்பாளர் பொறுப்பில் விடப்பட்டது. இவரது பணியை அலுவலக முறைகளின் இயக்குநர், சென்னை மாவட்ட ஆட்சியர் மற்றும் துணைச் செயலர் ஆகியோர் பொது மேற்பார்வை செய்துவந்தனர்.

இந்த ஆவணக்காப்பக அலுவலகம் கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்களை பாதுகாக்கும் ஆவண நிலையமாகச் செயல்பட்டது.

அ. அரசு தலைமைச் செயலக ஆவணங்கள்(கடைசி 5 வருடங்களுக்குரிய ஆவணங்களைத் தவிர) 1670 லிருந்து.

ஆ. வருவாய் வாரிய ஆவணங்கள் – பழையன

இ. மாவட்ட ஆட்சியர் அலுவலக ஆவணங்கள் –1820வரையிலானவை

ஈ. உயர்நீதிமன்ற ஆவணங்கள்

உ. கணக்காய்வாளர் (தேர்ந்தெடுத்தவைகள்) ஆவணங்கள்

ஊ. கர்னாடிக் (பெர்ஷியன் மொழியில்) ஆவணங்கள்.

எ. டச்சு ஆவணங்கள்

ஏ. டேனிஷ் ஆவணங்கள்

ஐ. மராட்டிய (கணக்கு) ஆவணங்கள்

ஒ. சில குறிப்பிட்டவகையான ஆவணங்கள்(Specifications etc.)

மேலும் இக்காப்பகத்தில் இந்திய அரசின் பழைய அரசிதழ்கள், செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழ்கள், நாள்கோள் குறிப்புகள், தகவல் தொகுதிகள், இராணுவம்-சிவில் பட்டியல்கள், சேர்த்துவைக்கப்பட்ட அந்தந்த துறைகளின் அறிக்கைகள், பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது.

இதன் மூன்று முக்கிய செய்கடங்களாவன (பணிகள்)

1) ஆவணங்கள் பாதுகாப்பு

ஆவணங்கள் தொகுதிகளாகவோ அல்லது தனித்தாட்களிலானவைக ளையோ, சேர்த்து அடுக்கி மரப்பலகைகளின் இடையே வைத்து ஒழுங்கு படுத்திக்கட்டி கட்டுக்கட்டாக திறந்த நிலை அடுக்கங்களில் வைக்கப் பட்டன. பழைய ஆவணங்களைச் செப்பனிட தனிப்பயிற்சி பெற்ற பணியாளர் கள் இருந்துள்ளனர்.

2) ஆவணங்களை வழங்குதல்

ஆவணங்கள் அனுப்பக்கேட்டுக்கடிதம் அனுப்பும் அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. தனி நபர்கள் ஆவண நகல்கள் கேட்டால், அந்தத் துறைகளுக்கே நேரிடையாக அனுப்பப்பட்டு அவர்கள் மூலமாக வழங்கப்பட்டன. ஆனால் அவர்கள் நேரிடையாக ஆவணக்காப்பகத்திற்கு அணுகுதல் கிடையாது. ஆராய்ச்சியாளர்களுக்கு தனி வசதிகள் செய்யப்பட்டது.

3) வெளியீடுகள்

கீழ்க்கண்டவைகள் ஆவணக்காப்பகத்தின் வெளியீடுகளாக வெளியிடப் பட்டுள்ளன :-

1. 1670 முதல் 1800 ஆண்டுவரையிலான அரசு தொல் ஆவணங்கள் பற்றிய அச்சுப்பட்டியல்கள் (சுருக்கக்குறிப்பு) இவைகள் 35 தொகுதிகள் வெளியிடப்பட்டன.

2. மறு பதிப்புகள்
17,18 மற்றும் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்குரிய ஆவணங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட அறிவுரைகள்(Consultations) அனுப்பப்பட்டவைகள்(Despatches)கடித நூல்கள் LetterBooks பல்வகையான சிறுகுறிப்புகள் (Sundries & co.)ஆகியவை களைக் கொண்ட 120 தொகுதிகள்

3. 1740க்குப் பிறகு உள்ள மதராஸ் ஆவணங்கள் பற்றிய விவர அறிக்கை (வரலாற்று ஆராய்ச்சிகளுக்கு வசதியாக காலமுறைப்படி ஒழுங்குபடுத்தியது) - 2 தொகுதிகள்.

4. பிரஞ்சு கவர்னர் டியூப்ளேயின் முதன்மந்திரி ஆனந்தரங்கம்பிள்ளையின் நாட்குறிப்பு (1736லிருந்து)தமிழ் மொழிபெயர்ப்பு (8 தொகுதிகள்)

பழைய ஆராய்ச்சிகள்

ஆங்கிலேயர் ஆட்சியில் 250 ஆண்டுகால வரலாற்றை தெரிந்து கொள்ளக்கூடிய ஆவணங்களைக் கொண்டிருக்கும் இந்த ஆவணக்காப்பகம் ஒரு ஆராய்ச்சிச் சுரங்கம் என்றால் மிகையில்லை. 1789இல் ஆர். கிளார்க் அவர்களும், 1830இல் வில்லியம் எல்லியட் அவர்களும், ஆவணங்களை ஆய்ந்து அவர்கள் இருவரும் 'நிலையான ஆணைகள்' (Standing Orders)என்பதை தொகுத்தனர்.

1837இல் காரேராவும், 1856இல் உறட்டல்ஸ்டன் என்பவரும் ஆவணங்களை ஆய்ந்து 17ஆம்நூற்றாண்டில் நிகழ்ந்தவைகளைப் பற்றி குறிப்புகள் மற்றும் சுருக்கம் 5 தொகுதிகள் தயாரித்துள்ளனர். 1860இல் டல்பாய் வீலர் என்பவர் ஆவணங்களை கூர்ந்தாய்வு செய்யுமாறு அனுப்பப்பட்டார். அதன் பயனாக மதராஸ் ஆவணங்கள் பற்றிய கையேடு ஒன்று தயாரிக்கப்பட்டது. இது மிக முந்திய நாளிலிருந்து 1748 வரை நடந்துள்ள ஆர்வமிக்கச் செய்திகளாகும். அவரே சர் தாமஸ் மன்ரோவின் நிகழ்ச்சிக்குறிப்புகளை தொகுத்தார். இதனையே சர். ஏ. ஜே. அர்பத்நாத் என்பவர் அச்சிட்டு வெளியிட்டார். அடுத்து ஆவணங்களைப்பற்றிய சரியான விசாரணைகளை 1886இல் சி. ஜி. மாண்டர் (கவுன்சில் உறுப்பினராகவும் 1678லிருந்து கவர்னராகவும் இருந்த இவர் சர் ஸ்டெரின் உஷாம் மாஸ்டரின் வழித்தோன்றல் ஆவார்) மற்றும் சி. டி. மக்லின் (அரசுச் சார்புச் செயலர்) ஆகிய இருவரும் தொடங்கிவைத்து, அவர்களின் உழைப்பின் பயனாக முடிப்பெண் முறை(Disposal number system) உருவானது.

1894இல் திரு ஏ. டி. பிரிங்கிள், (உதவிச் செயலர்) உறட்டல்ஸ்டன் முன் செய்த பணியை தொடர்ந்து செய்து 17ஆம் நூற்றாண்டு ஆவணங்களுக்கான குறிப்புகளைச் சேர்த்து மேலும் 4 தொகுதிகள் மறு அச்சிட்டார். ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பை சர் பெடரிக் பிரைஸ் என்பவர் மொழி பெயர்த்ததை டாட்வெல்லும் தொடர்ந்து செய்தார்.

1909-11 இவ்வாண்டுகளில் ஏ. கல்லத்தி என்பவர் 15 டச்சு ஆவணங்களை பதிப்பித்து வெளியிட்டார்.

ஹெச் டாட்வெல் பாதுகாப்பாளராக இருந்தபோது மதராஸ் ஆவணங்கள் பற்றிய அறிக்கை (Report on the Madras Records) தயாரித்து 1740 முதல் 1754 வரையிலான காலத்துக்குரிய ஆவணங்களின் விவர அறிக்கைகளை 2 தொகுதிகளாக வெளியிட்டார்.

இந்த ஆவணக்காப்பகத்தைப் பயன்படுத்திய வெளியார் பேரா. பாரஸ்ட் என்பவர் குறிப்பிடத்தக்கவர். இவர் கிளைவ் பற்றி ஏராளமாக குறிப்புகள் எடுத்து தொகுத்தார்.

எச்.டி.லவ் என்பவர் 1913இல் இவரது ஞாபகார்த்தமாக 'பழைய மதராசின் அடிச்சுவடு (Vestiges of old Madras) என்ற நூலையும், திருமதி பிராங் பென்னி என்பவர் 'செயின்ட் ஜார்ஜ் கோட்டை' என்ற நூலையும் எழுதினர்.

1929இல் ' Strange James Journal ' என்ற நூலை முன்னாள் பாதுகாப்பாளர் திரு எ.வி. வெங்கட்ராம ஐயர் அவர்கள் செயின்ட் ஜார்ஜ் கோட்டை ஆவணங்களைக் கொண்டு எழுதியுள்ளார்.

மற்றும் முன்னாள் பாதுகாப்பாளர் பி.மக்யூன் அவர்கள் 1942இல் நிர்வாக நடைமுறைகள் பற்றியும் பிரிட்டிஷ் காலத்துக்கு முன் பொது நிர்வாகம் பற்றியும் எழுதினார்.

முன்னாள் பாதுகாப்பாளர் டாக்டர் பாலிகா அவர்கள் தாமஸ் சான்டர்ஸ் பற்றியும், சென்னையில் உருக்குத் தொழில், கைத்தறி தொழில் வளர்ச்சி பற்றியும் மதுவிலக்கு பற்றியும் - மதராஸ் நிர்வாகம் பற்றிய ஆய்வுகள் 2 தொகுதியாகவும் மதுரை மாவட்ட விவரச்சுவடியும் எழுதியுள்ளார்கள்.

ஆவண மருத்துவம்

(ரெக்கார்ட் தெரப்பி)

மு.சாரங்கபாணி,
பாதுகாப்பு எழுத்தர்.

அமெரிக்கா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் இப்போது மருந்துகளின்றி சில நோய்களைக் குணப்படுத்த 'புக் தெரபி' என்ற நோய்ச் சிகிச்சை முறையைக் கண்டுபிடித்துள்ளார்கள். இந்தப் புதிய 'புக் தெரபி' முறையில் அநேகர் தங்கள் வியாதிகளைக் குணப்படுத்தியுள்ளதாக செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இதைப்போன்றே 'RECORD THERAPY' என்ற முறையில் ஒரு சிலரது வியாதிகளைத் தீர்க்க முடியுமா என்று நாம் ஆராய்ச்சி செய்யவேண்டும். எப்படி? ஏதாவது ஒரு புத்தகத்திலிருந்து சில பகுதிகளைத் தெரிந்தெடுத்து படித்தவுடன் ஒருவரது வியாதி படிப்படியாகக் குறைந்து பூர்ண குணம் ஏற்படுகிறதோ அதைப்போன்றே 'ரெக்கார்டு தெரப்பி'யிலும் இம்முறையைக் கையாண்டு வியாதிகளைக் குறைக்கும் வாய்ப்பை உருவாக்கலாம். இதற்குச் சரியான வாய்ப்புகளை உருவாக்க 'ஆவணக்காப்பகங்கள்' முயலவேண்டும். முதலில் இப்படிப்பட்ட மருத்துவக் குணம் கொண்ட ஆவணங்கள் கெட்டுப்போகாமல் நாம் அவற்றை காப்பாற்றவேண்டும். பின்னர் ஆவணங்களுக்கு மருத்துவக் குணம் உள்ளதா என்பதை அறிய முயலவேண்டும். ஆவணங்களின் தன்மையைக்கொண்டு தீர்மானிக்கப்படவேண்டும்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் எங்கள் கிராமத்தில் ஒரு சித்தப்பிரமை பிடித்தவர் இருந்தார். அவருக்கு எத்தனையோ சிகிச்சைகள் செய்தும் வியாதி போகவில்லை. அவர் எப்போதும் 'எங்கே ரெக்கார்டு, எடுத்து வா' என்றேஅடிக்கடி புலம்பிக்கொண்டிருப்பார்.

அவரை எல்லோருமே ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். கிராமத்தில் எல்லோருக்கும் புரியாத புதிராக அவர் தென்பட்டார். ஒரு தலைமுறை கழிந்தது. அவருக்குப்பிறந்த பிள்ளைகள் எல்லோரும் இறந்து விட்டார்கள். அவர் தனியாளாக இருந்தார். வயதான அவரது மனைவியும் இருந்தார்கள். ஒரு நாள் அந்தக் கிராமத்திற்கு ஒரு பெரிய அதிகாரி வந்தார். ஊரில் ஏதோ விசாரணை நடத்திக்கொண்டிருந்தார். இனாம் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்துவிட்டதாக சிலபேர் மீதுள்ள புகார்கள் விசாரிக்கப்பட்டது. இனாம்தார் யார் என்பதே அப்போது யாருக்கும் தெரியாது. வயதானவர்களில் படித்தவர்கள் யாராவது இருக்கிறார்களா

என்று கேட்டபோது இந்த சித்தப்பிரமைக்காரரை எல்லோரும் காட்டினார்கள். அவர் ஒரு தெருவில் தாம் எப்போதும் புலம்பும் வார்த்தைகளையே கூறிக் கொண்டு நின்றிருந்தார். அவரை அழைத்துச்சென்று அதிகாரி முன்பு விட்டார்கள். எதையோ பறிகொடுத்தவர்போலத் தோன்றிய அவர் 'எங்கே ரெக்கார்டு, எடுத்துவா' என்றே கூறிக்கொண்டிருந்தார். அவரது மனைவியை அழைத்து வரச்சொன்னார் அதிகாரி. அந்த மூதாட்டி வந்தாள். அவளிடம் அதிகாரி அவரது கணவர் பற்றி விசாரித்தார். தம் வீட்டிலிருந்து ரெக்கார்டுகளை யாரோ கொள்ளை அடித்துச் சென்றதைக் கூறினார். அதனால் அவருக்குச் சித்தப்பிரமை ஏற்பட்டதாகவும் கூறினார். அதிகாரி சென்ற சில நாட்களுக்குப் பிறகு அந்த ஊருக்கு செட்டில்மெண்டு தாசில்தார் வந்தார். அவரிடமிருந்து சில ரிகார்டுகளை அந்த முதியவருக்கு எடுத்துக் கொடுத்தார். அந்த ரெக்கார்டுகளை கண்டதும் சித்தப்பிரமையாக இருந்தவர் நன்றாகவே உரத்துச்சிரித்தார். இதோ ரெக்கார்டு என் நிலத்தை விட்டுப்போய்விடு என்று சத்தமிட்டுக்கூறினார்.

சில நாட்களில் அவர் தமது நிலங்களைப் பார்வையிடச்சென்றார். அந்த ஆவணங்களே அவருக்கு ஆருயிர் மருந்தாக இருந்தது. சித்தப்பிரமை நீங்கியது. அவரது கவலையும் தீர்ந்தது. எந்த ஒரு வியாதிக்காவது ஆவணங்கள் காரணமாக இருந்தால் அத்தகைய வியாதிகளை ஆவணங்கள் மூலமாகவே தீர்க்க வழியுண்டு என்பதை மேற்கூறியவற்றிலிருந்து தெரியவருகிறது. எனவே 'ரெக்கார்டு தெரபி' என்பதை புதிய அணுகுமுறையில் கணிக்கவேண்டும்.

க.ந.

மவுண்ட் சாலை-வரைபடம்





GOVERNMENT HOUSE, MADRAS

சென்னை மவுண்ட் சாலை - அன்றும் இன்றும்

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்து 8 மைல் தொலைவிலுள்ள பரங்கிமலையை இணைக்கும் மிக நீண்டதும், அகலமானதுமான சாலையே மவுண்ட் சாலை. இப்போது 'அண்ணா சாலை' என இதன் பெயர் மாற்றப்பட்டுள்ளது.

இந்த நெடுஞ்சாலை 1795இல் போடப்பட்டது. இதன் வரலாற்றை அது அடைந்துள்ள மாற்றங்களிலிருந்து கண்டுணரலாம். அக்காலத்தில் இல்லாததும் இன்று நாம் காண்பதும் அதன் பல அடுக்குக் கட்டடங்கள், மக்கள் போக்குவரத்துப்பெருக்கம், இடநெருக்கடி ஆங்காங்கே தொழிற் சாலைகள் - வாகனங்கள் அதிகரித்தல், - நடுவே சுரங்கப்பாதைகள் - ஓரஞ்சாரங்களில் சினிமா அரங்குகள் - பெரிய வீடுகளும் தோட்டங்களும் - குட்டிப் பங்களாக்கள் - சாலை ஆக்கிரமிப்புகள் - சாலைகள் மீது கடைகள் - கோவில்கள் - பள்ளிகள் - கல்லூரிகள், காவல் நிலையங்கள் போன்றன பல.

18-ஆம் நூற்றாண்டின் ஆரம்ப நாட்களிலேயே மவுண்ட் சாலையின் இரு புறமும் மாளிகை போன்ற அமைப்புடைய வீடுகள் எழுப்பப்பட்டன. வெள்ளையர்கள் தங்களின் ஆதிபத்திய பட்டணமான ('WHITE TOWN' 'லிருந்து, வெளியேறி மவுண்ட் சாலைகளின் இருமருங்கும் குடிபெயரத் தொடங்கினர். இதனை அறிந்த நுங்கம்பாக்கம், தி. நகர், சாந்தோம், தேனாம்பேட்டை, ராயப்பேட்டை மக்கள் தங்களுக்கு இது பெரும் தொந்திரவு என்று கருதினார்கள்.

எனவே வெள்ளையர்கள் சென்னையின் எல்லையை 1775ல் வரையறுத்தபடி, கறுப்பர் பட்டணத்திலிருந்து 1 மைல் வடக்கேயும் அங்கிருந்து சேத்துப்பட்டு, வேப்பேரி-மேற்கே நுங்கம்பாக்கம் ஏரி வரையிலும், தெற்கே அடையாறு சாந்தோம் எல்லை வரையிலும் எல்லைக்கோடிட்டு சுற்றிவர மரங்களும் புதர்களையும் கொண்டு வேலி அமைக்கலாம் என்று எண்ணினார்கள். ஆனால் அது கனவாகவே போய்விட்டது. வருவாய்க்குழு இவ்வேலைக்காகும் செலவைக் கருதி கைவிட்டுவிட்டது.

செயிண்ட் ஜார்ஜ்கோட்டை அருகே எப்போதும் இராணுவ நடமாட்டமே அதிகம். தீவுத்திடல் அன்று வனமாக இருந்தது. அங்கே கால்ப், போலோ போன்ற விளையாட்டுத்திடல்கள்தோன்றின. ஜிம்கானா விளப்பும் அங்கே எழுப்பப்பட்டது. கொஞ்ஞரத்தில் அரசுத் தோட்டம் (தற்போது சட்டமன்ற உறுப்பினர் விடுதியும் ராஜாஜி ஹாலும் உள்ள மாளிகை) இருந்தது.

இங்கேதான் 11.12.1758 அன்று மேஜர் லாரன்ஸ் என்பவன் தன் பட்டாளத்தைக்கொண்டு, பிரஞ்சுப்படைகளை மவுண்ட் சாலையைக் கடந்து தமிழர் வாழும் கறுப்பர் பட்டணத்துக்குப்போகவிடாமல் தடுத்தான். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை. இப்படைகள் மறுநாளே கோட்டைக்குள் திரும்பிவிட்டன. பிரஞ்சுத் தளபதி கவுண்ட் லாலியின் படை அரசுத்தோட்டத்திலும் அங்கிருந்த மைதானத்திலும் முகாமிட்டது.

இச்சாலை ஓரங்களில் முக்கிய வியாபாரக்கடைகள், உணவு விடுதிகள் தோன்றின. சிறிது நாட்களில் இவ்விடத்தில் பெரிய கடைவீதியாகவே உருவாகி விட்டது. அருகே பொப்பிலி மகாராஜாவின் பெரிய மாளிகை உருவானது. இது மவுண்ட் சாலையின் இடது புறத்திலே உருவானது.

இச்சாலை 'ஆயிரம்விளக்கு'ப் பகுதியைஇடையறுத்துச்செல்கிறது. இந்தப் பெயர் விசித்திரமானதாகக் கருதப்பட்டது. பீட்டர்ஸ் சாலையின் ஓரத்தில், மிகப் பெரிய கருஞ்சிவப்பு நிறத்தில் மாளிகை ஒன்றும் அங்கே உருவானது. இதனை உம்தத்-உல்-உம்உறா என்று பொதுமக்கள் மரபாக அழைத்துவந்தனர்.

ஒன்பதாவது கர்நாடக நவாப்பு (1795-1801)க்கு இதன் அருகே ஏராளமான சொத்துக்கள் உண்டு. அதன் எதிரே முகமதியர்களின் வெள்ளை நிறத்தாலான பள்ளிவாசல் இருந்தது.

அடுத்து, இச்சாலையின் இடப்புறம் செயின்ட் ஜார்ஜ் கதீட்ரல், விவசாயத் தோட்டப்பண்ணைத் காணலாம். மேலும் அரசுத் தோட்டத்தருகே இருந்த கடைவீதிகள் போன்றே இங்கேயும் கடைவீதி தோன்றியது. வழி நெடுக மரங்கள் - ஆலமரங்களே அதிகம் - வலதுபுறம் ஏரி ஒன்று. மண்ணாலான கரைகளையும் பனை போன்ற மரங்களும் இருந்தன. இது நுங்கம்பாக்கம் ஏரியின் தொடர்ச்சி என்று கூறலாம். இந்த ஏரிக்கருகே காரன்வாலிஸ் 28.1.1791 அன்று 'பெங்கால் பட்டாளத்தை' பார்வையிட்டார்.

இப்பட்டாளம் சீரங்கபட்டணம் செல்லுமுன் ஜெனரல் மேரிதோவுடன் கலந்தாலோசனை செய்தான், காரன்வாலிஸ் சிப்பாய்கள் மட்டும் 18000 பேர் அங்கே குழுமியிருந்தனர். அவர்களுடன் இதே எண்ணிக்கையில் துணைக்கு ஆட்கள் சென்றனர்.

இடது பக்கம் தெற்கு நோக்கி இராணுவ தாவரப்பண்ணை சைதாப் பேட்டையில் உள்ள கால்நடை மருத்துவமனை வரை சென்றது. இதன் எதிர் வாடையில் ஒரு புதுமையான நினைவுத்தூண் ஒன்றிருந்தது. அதில் கீழ்க்கண்டவாறு செதுக்கப்பட்டிருந்தது. "இந்தப்பாலம் பொதுமக்கள் நன்மைக்காக சென்னை வியாபாரப் பிரமுகரான திரு ஆட்ரியன் போர்பெக் என்பாரின் சாசனத்தின்படி, அவர் ஞாபகார்த்தமாக என்றும் அவர் நினைவு இருக்கும் வகையில்அவரது உதார குணத்தையும் ஈகையினையும் குறிப்பிடும் வகைக்கு கட்டப்பட்டது".

இந்த நினைவுத்தூணை டி.பெல்லிஸ் ஐ ஃரைல் மற்றும் பி.போத்கின் ஆகியோர் நிறுவினர். இதனை லெப்டினண்ட் கர்னல் பட்டிரிக் ரோஸ், தலைமைப் பொறியாளர் தலைமையில் 1786இல் கட்டி முடிக்கப்பட்டது. இதே கல்வெட்டினை இலத்தீன்; தெலுங்கு உருது ஆகிய மொழிகளிலும் அந்த நூலில் குறிப்பிட்டுள்ளனர்.

இப்பாலத்தின் வழியே மவுண்ட் சாலையைக் கடந்து பெரிய ஏரியிலிருந்து கழிவு நீர் ஓடியது. இந்த நினைவுத்தூணிற்குப் பின்பக்கம் தோட்டம் இருந்தது. அது செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் வசிப்பிடமாகவும் இருந்தது. 1837இல் தயாரித்த வரைபடத்தில் இதே இடத்தை ஜெனரல் கேம்பெல்லினுடையது என்றோ தாவரப்பூங்கா என்றோதான் குறிப்பிடுவார்கள். இதனையே முன்பு மதிப்பிற்குரிய கும்பெனியார் Nopalry என்றும் அழைத்தார்கள். தாவர மருத்துவத்துறை தலைவரும் புகழ்பெற்ற தாவர இயல் நிபுணருமான டாக்டர் ஜேம்ஸ் ஆண்டர்சன் அவர்களின் சோதனைக்கிணங்க ஏற்படுத்தப்பட்ட சப்பாத்தி இலைத்தை உண்டு வாழும் ஒருவகைப் பூச்சியிலிருந்து எடுக்கப்படும் சாயத்தொழிற்சாலையை முன்னிட்டும் இவ்வாறு அழைக்கப்பட்டது. இந்தப் பூச்சிகளுக்கான Nopal shrub என்ற செடி மெக்ஸிகோவிலிருந்து தனியாக இறக்குமதி செய்யப்பட்டு வந்ததாம்.

Vestiges of old Madras, Madras, the birth place of British India என்ற நூல்களைத்தழுவி எழுதப்பட்டது)

தொகுப்பு: வெளியீட்டுப்பிரிவு.

Photo by Lt.-Col. H. A. Newell.

COUNCIL CHAMBER, FORT ST. GEORGE, SHOWING PITT'S PILLARS.



'The old Fort House now the Secretariat & St.Mary's Church, Fort St.George.



Photo by Wiele & Klein.

THE OLD FORT HOUSE, NOW THE SECRETARIAT & ST. MARY'S CHURCH, FORT ST. GEORGE.

முன்னாள் செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அரசு அலுவல்கள்

கடந்த மூன்று நூற்றாண்டுகளில் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் அரசு நிர்வாகம் எவ்வாறு நடந்தது என்பதைக் குறிக்கும் சில செய்திகள் தொகுத்து வழங்கப்படுகிறது.

அரசு நடவடிக்கைகள் அனைத்தும் கவுன்சில் என்ற அமைப்பின் கட்டளைப்படி நடந்தது. கவுன்சில் உறுப்பினர்கள் அனைவரும் வியாபாரப் பிரமுகர்களே. இவர்களில் மூத்த பிரமுகரே பின்னாட்களில் 'ஏஜெண்ட்' என்று அழைக்கப்பட்டார். 1653இல் இருந்து இந்த ஏஜண்டுகள் 'பிரஸிடெண்ட்' என்ற பெயரில் அழைக்கப்பட்டனர். 1686 முதல் பிரஸிடென்ட் என்ற பெயரை மாற்றிக் 'கவர்னர்' என்று அழைக்கத் தொடங்கினர். இவருக்கு அடுத்து இரண்டாம் நிலையில் 'புக்கீப்பர்' என்ற பதவியில் அமர்த்தப்பட்டவர்களும் மூன்றாம் நிலையில் 'வேர்உறவுஸ் கீப்பர்' என்பவர்களும், நான்காம் நிலையில் 'வாடிக்கையாளர்' அல்லது 'கடல் சுங்கவரி வசூலிப்போர்' என்பவர்களும் இருந்துவந்தனர்.

ஒவ்வொரு திங்கள் கிழமையும், வியாழக்கிழமையும் காலை 8 மணிக்கு அவர்கள் மன்றத்தில் கூடுவார்கள். அப்போது கம்பெனி விவகாரங்கள் அனைத்தும் அவர்கள் முன் பரிசீலனைக்கும் யோசனைக்கும் வைக்கப்பெறும். செயலாளர் தினசரிக் குறிப்பேட்டை தயாரிப்பார். இதன் நகல் ஆண்டுக்கு ஒரு முறை இலண்டன் மாநகருக்கு அனுப்பப்படும். இதற்கு அங்கிருந்த 'கோர்ட் ஆப் டைரக்டர்கள்' ஒரு பதிலை அனுப்பு வார்கள்.

ஆங்கிலேயர்கள் செய்யும் குற்றங்களுக்கு அவர்களை கவர்னரும் மற்றும் கவுன்சில் உறுப்பினர்களும் விசாரணை நடத்துவார்கள். இந்த விசாரணை 12 ஆங்கிலேய ஜூரிகள் முன்னர் நடைபெறும்.

தமிழர் பட்டினத்தில் (பிளாக் டவுன்) வாடிக்கையாளர் என்று அழைக்கப்பட்ட நான்காம் நிலையில் உள்ளவர்கள் சவுல்ட்ரி கோர்ட்களில் மாஜிஸ்ட்ரேட்டாக இருந்தார்கள். இவர்கள் சாதாரண வழக்குகளுக்கு நீதி வழங்கினார்கள். இந்த நீதிமன்றம் செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் கூடும். விசாரணைகளின்போது நாணயச்சாலை தலைவரும் துணைக் கருவூல அலுவலரும் உடனிருப்பார்கள். அக்காலத்தில் தண்டனை மிகவும் கொடுமையாக இருந்தது. பிழீன்கள் வேலையின்போது தூங்கினால் அல்லது அலுவலகத்துக்கு வராது நின்றுவிட்டால் 'கடல் சுங்கவரி வசூலிப்போர்' அவர்களை குற்றவாளியென தீர்மானித்து சாட்டையினால் இடத்து இடம் விளாசுவார்கள். குறிப்பிட்ட 5 இடங்களில் ஒவ்வொரு இடத்திலும் 5 கசையடிகள் வீதம் கொடுப்பார்கள். பின்னர் பணிநீக்கம்

செய்யப்படுவார்கள். கொலைக்குற்றம் செய்தவர்கள் மரண தண்டனைக்கு ஆளாவார்கள். தண்டனையை அதற்கே உரித்தான இடத்தில் நிறைவேற்றுவார்கள். போர்ட் உறவுசின் முக்கிய நுழைவாயிலின் மேற்புறத்தே தண்டனை நிறைவேற்றும் கம்பம் இருந்தது. அங்குதான் தண்டனை பெற்றவர்கள் சுட்டுத்தள்ளப்படுவார்கள். பின்பு பிரேதத்தை சங்கிலியால் பிணைத்து தூக்குக் கம்பத்தில் மாட்டி பூந்தமல்லி நெடுஞ்சாலையைநோக்கி தொங்கவிடுவார்கள்.

பாதுகாப்புப் படைக்கு தலைவரான கவர்னரே வெள்ளையர் பட்டணமான செயின் ஜார்ஜ் கோட்டையில் அமைதியை பாதுகாக்கும் பொறுப்புடையவர். தமிழர் பட்டணத்தில் (கோட்டைக்கு வடக்கே) மற்றும் அருகேயிருந்த பேட்டைகளில் அமைதிகாக்கும் வேலை அனைத்தும் உள்ளூர் அலுவலரான பெத்த நாயக் என்ற பதவிக்குரியவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. காவல் செய்வதையும் 20 பேர் கொண்ட யோலிஸ் படையையும் அவர் கண்காணித்துவந்தார். பெத்த நாயக் பதவியானது பரம்பரை வழியாக கொடுக்கப்பட்டது. சில சலுகைகளையும் சில உபாதைகளையும் இப்பதவியில் உள்ளவர்கள் அடைந்தே தீரவேண்டும். யாராவது ஒருவர் வழிப்பறி செய்யப்பட்டால், பெத்த நாயக் வழிப்பறி செய்யப்பட்டவர்களுக்கு இழந்தபொருளுக்கு ஈடுகொடுத்தாகவேண்டும். மற்றொரு வழியில் இவர் சம்பாதிக்க உணவுத்தானியங்கள், எரிபொருள், எண்ணெய் மீன், வெற்றிலை இவைகள் மீது சிறிது வரிவிதிக்கவும், அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தார். மேலும் பெத்த நாயக்குக்கு இலவச வீடு, கோமரா பேட்டையில் குன்டுகுழியுமாக கொஞ்சம் நெல்விளையும் நிலமும் அளிக்கப்பட்டிருந்தார். இதுவே இப்போது பெத்த நாயக்கன்பேட்டை என அழைக்கப்படுகிறது.

1675 இல் கிழக்கிந்தியக் கம்பெனி சிவில் பணிகளில் சில குறிப்பிட்ட பதவிகளை ஏற்படுத்தியது. பயிற்சியாளர்கள் ஏழாண்டுகள் பணிபுரியவேண்டும். முதல் 5 ஆண்டுகளில் அவர்களது வருட வருமானம் 5 பவுன் ஆகும். இதுவே கடைசி ஈராண்டுகளின்போது 10 பவுனாக வழங்கப்பட்டது. அதன் பின்னர் அவர்கள் ஓராண்டுக்குள் எழுத்தர்கள் ஆனார்கள். அப்போது 20 பவுன் பெற்றார்கள். அந்த ஓராண்டின் முடிவில் 'FACTOR' என்ற பதவி உயர்வு அளிக்கப்பட்டார்கள். அதன் பிறகு 50 பவுன் ஊதியத்தில் மெர்ச்சன்ட் என்ற பதவி உயர்வு கிடைத்தது. கவர்னருக்கு ஆண்டுக்கு 200 பவுன் ஊதியமும் பணிக்கொடை 100 பவுனும் அளிக்கப்பட்டார். பிகாட் கவர்னராக இருந்தபோது இதுவே 3000 பவுனாக உயர்த்தப்பட்டது. அடுத்த வந்த காலங்களில் சென்னை கவர்னருக்கு ரூ.10,000/- மாதச்சம்பளம் அளிக்கப்பட்டது. வீட்டுவாடகை மற்றும்

பயணச்செலவாக ரூ.94,000/- ஓராண்டுக்கு வழங்கப்பட்டதோடு ரூ.7,500/- மரச்சாமான்களுக்காக அளிக்கப்பட்டது.

கவுன்சிலில் இரண்டாம் நிலைப் பதவி வகித்தவர் (புக்கீப்பர்) ஆண்டுக்கு 100 பவுனும், மூன்றாம் நிலையினருக்கு (வேர்உறவுஸ்கீப்பருக்கு) 70 பவுனும் நான்காம் நிலையினருக்கு அதாவது கடல் சுங்கவரி வசூலிப்போருக்கு 50 பவுனும் அளிக்கப்பட்டது. இவர்கள்உணவு உறைவிடம் இலவசமாகப் பெற்றார்கள். கம்பெனியின் ஏனைய உறுப்பினரான குருக்களுக்கு உதவித்தொகை 100 பவுனும் பள்ளி ஆசிரியருக்கு 250 பவுனும் வழங்கப்பட்டது.

கம்பெனியின் தலைமை வியாபாரிக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டது. இந்த இடத்தை முதலில் பிடித்தவர் ஷேசடு நாயக் என்பவர் கவர்னர் 'ஜவி' இருந்தபோது வெங்கடவீரண்ணா என்பவரை ஷேசடு நாயக்குக்கு பின்னர் இப்பதவியில் அமர்த்தப்பெற்றார். இவர் காசாவீரண்ணா அண்ட்கோ என்ற கூட்டு பங்கு வியாபார கம்பெனிக்கு தலைவராகவும் இருந்தார். இவரே கம்பெனியின் அனைத்து முதலீடுகளுக்கும், இறக்குமதியாகும் பொருட்களை வாங்குவதற்கும், ஐரோப்பாவுக்கு ஏற்றுமதியாகும் பொருட்களை வாங்குவதற்கும், அனுமதிக்கப்பட்டார். இவர் 1680இல் மரணம் அடைந்தபோது கோட்டையில் 30 குண்டுகள் வெடித்து மரியாதை வழங்கப்பட்டார்.

சர் வால்டர் ஸ்காட் தன்னுடைய நாவலான 'வைத்தியர் மகள்' (சர்ஜன்ஸ் டாட்டர்)இல் போர்ட் ஜெயின் ஜார்ஜ் கோட்டையின் துபாஷ் என்பவர் ஒரு மொழி பெயர்ப்பாளராக இருந்தாலும் இவரே கவர்னருக்கு அண்டைஅயலில் உள்ள அதிகார வர்க்கம் பற்றி தன் கருத்துக்களையும் வெளியிடக் கூடியவராகவும் இருந்துவந்துள்ளார். சென்னையில் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மிகவும் பிரபலமாக விளங்கிய பார் பார்பெயர் என்பவரை ஒரு பாத்திரமாக கொண்டு தமது நாவலில் ஸ்காட் சித்தரித்துள்ளார்.

தொகுப்பு: வெளியீட்டுப்பிரிவு.

(x) துபாஷ் பெற்றிருந்த செல்வாக்கு பற்றி குறிப்பிட்டுள்ளார்.

க.ந.

ஆவணக்காப்பகமே! வாழி!

1) முன்னோர்கள் வாழ்ந்தநிலை காற்றைப் போலே!
ஆன்றோர்கள் வாழ்ந்திட்டார் பேற்றைக் காணார்
சான்றோர்கள் ஆக்கிட்டார் ஆயும் ஓலை
ஆண்டவர்கள் ஏத்திட்டார் கற்று விலே.

2) தாத்தாவைப் பார்த்திருப்பான் கேட்டிருப்பான் பேரப்பிள்ளை
மூத்தோரைப் பார்த்ததுண்டா கேட்டதுண்டா என்று கேட்கின்
நேத்தைக்கு நடந்தநிலை நினைவேயில்லை நெடியதோர்
காலத்தைக் கேட்பதுவும் நியாயந் தானா?

3) தொல்லேட்டைப் பாதுகாத்துப் பலநூற் றாண்டாய்
சொல்லேறு உழவரெலாம் செம்பொன் னேயென்று
அரவணைத்துக் காத்தலாலே இந்நூற் றாண்டில்
உரம்பெற்று வாழ்கிறது குன்று போலே.

4) தொல்லேடே இல்லையெனில் தொன்மைநிலை காணுதற்கு
இல்லாளே இல்லாத இடிந்தகுடில் போலிங்கு
கண்ணூறும் போதெல்லாம் காலமெல்லாம் நாம்இதையே
எண்ணாது இருப்பதற்கே காத்திட்டீர்; ஆவணத்தை.

(தொல்லேடே தன் வரலாறு கூறுகிறது கேளுங்கள்)

5) கோட்டையிலே யான்பிறந்தேன் கோலோச்சத் துணையானேன்
ஆளவரை மக்களுக்கு ஆக்கங்கள் செய்திட்டேன்
கோட்டையுடை மடியினிலே கூடியொன்றாய் விளையாடி
ஆணையென நாங்களெல்லாம் ஓய்வெடுத்தோம் காப்பகத்தில்.

6) கண்ணோடே இமையினையே காப்பதுபோல் பதிவர்அவர்
பண்பாடு செயலரவர் பதிவுகளைக் கேட்கையிலே
அன்போடு உறையிலிட்டு அரவணைத்து எங்களையே
நன்பாக அனுப்பிடுவார் நானும்உடன் சென்றிடுவேன்.

7) எங்களுக்கும் எத்தனையோபேர் ஏவல் செய்ய
வங்கத்துக் கடலலைபோல் அங்கு மிங்கும்
பொங்குகிற கேள்விகட்குப் பதிலும் சொல்வோம்
மங்காது திரும்பிடுவோம் காப்பகத்தைநோக்கி

8) கல்வியென்றும் வீடுயென்றும் தொழிலோடு நிதியாமென்றும்
செல்வநிரு வாகமென்றும் நிலையான நீதியென்றும்
நல்வாழ்வு விவசாய நிலமென்றும் எத்தனையோ
செல்லமாக எங்களையே அழைக்கின்றார் காப்பகத்தில்

9) முதுமையினால் தளர்வுற்று பணிமுடித்து வீடடைவீர்; நானோ
இளமைகெட்டு பழமையுற்று பன்னூறாண் டானாலும்
செப்பனிட்டு வேல்விழியார் போலெம்மை எழிலாக்கித்
தேக்கினைப்போல் ஆக்கிடுவார் காப்பகத்தில் எங்களையே

10) முதுகெலும்பு என்றுசொன்னால் மிகையா காது
முழுஉருவாய் எமையாக்கிச் செப்ப னிட்டு
நலமாகக் காஉஷ்மீரத் துணியு மிட்டு
சிலையெனவே ஆக்குவார்காப் பகத்தி லேதான்.

11) பூவாடைக் கட்டிடுவார் சிறுநூலால் சடையும் பின்னி
காத்தாட விட்டுப்பின் கச்சிதமாய் கரையும் வெட்டி
மேலாடை இட்டிடுவார் முதுகெடுத்து முறையாய்த்தட்டி
நாள்தோறும் கட்டிடுவார் காப்பகத்தில் எம்மை.

12) நோயுற்று நிறம்கெட்டு நிலைகெட்டு நிற்கும்போது
மேற்கத்தி பொறியொன்றை பொழுதொடு வரவழைத்து
நோய்நீக்கி நலமாக்கி வாழவைத்த ஆணையர்க்கு
எம்நன்றி உரைத்திடுவோம் என்றென்றும் காப்பகத்தே

13) தலைவாரி பூச்சூடி தாழமடல் ஓலையிலே
பிழையேது மில்லாமல் மையினால் எண்ணுமிட்டு
கலையாமற் பெயரெழுதி, நிற்கின்ற சிப்பாய்போல்
நிலையாக நிறுத்திடுவார் நூலகத்தில் என்றும் எம்மை.

14) பலநாட்டு நல்லறிஞர் தாய்வீடு நாடிவந்து
பலபட்டம் பெறக்கருதி பாங்காக எமைநோக்கி
எமைதொட்டு எடுதள்ளி எழுதுங்கால் யாம்மகிழ்ந்து
இணையில்லா பீடுகொள்வோம் இன்பமுடன் ஆய்வகத்தில்!

ம. இரா. கிருட்டிணசாமி,
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்,
எழும்பூர், சென்னை-8

க. ந.

எம்.ஜி.ஆர்

குடந்தை சா. வேங்கடராமன்

(1) மலையாக உயர்ந்துநின்றீர், மாரியென உயிர்காத்தீர்,
கலைவாழத் தொண்டுசெய்தீர் காலமெலாம் ஏழைமக்கள்
நிலைமாற செயல்பட்டீர், நேர்மைக்கே அரசியலில்
தலையான இடம் தந்தீர், தாயெனவே பரிவுகாட்டி

(2) மாந்தர்தம் வாழ்வுயர மகிழ்வுடனே பாடுபட்டீர்,
ஈந்தசெல்வம் எத்தனையோ, எவரிங்கு கூறவல்லார்?
தீந்தமிழ்த்தாய் வாழ்த்திடவே செய்தபணி பலவுண்டே!
காந்தத்தால் இரும்புலகில் கவரப்பட்(டு) ஓட்டும்போல்

(3) மக்களிங்கு தங்களையே மனமார நேசித்தார்,
சொக்கவைத்தீர், நற்பணிகள் சோராமல் நடத்துவித்தீர்,
அக்கறையாய் எம்துயரம் அகற்றுவிக்கப் பாடுபட்டீர்,
எஞ்ஞான்றும் உமக்காக இன்னுயிரை ஈவதற்கும்

(4) எத்தனையோ பேரிருக்க, ஏனிறந்தீர் புரியவில்லை
வித்தகரே, என்றென்றும் விளங்குமேஉம் சாதனைகள்,
அத்தனையும் சொல்வதென்றால் ஆதிசேடன் வரவேண்டும்
புத்தனைப்போல் ஏசுவைப்போல் பொன்னுலகு சமைப்பதற்கு

(5) திட்டங்கள் தீட்டிமிகத் தீவிரமாய் செயல்பட்டீர்
பட்டதுயர் அத்தனையும் பஞ்செனவே பறப்பதற்கே
இட்டமுடன் உம்தலைமை எம்மக்கள் ஏற்றுவந்தார்
சட்டங்கள் நீரியற்றத் தம்வாழ்வு சிறக்குமென்றே

(6) துணிவோடு வாழ்ந்திருந்தோர் துயரமினி யார்தீர்ப்பார்?
அணியாகச் சிறந்துநின்றீர், அருந்தவமே உம்வாழ்க்கை
தணியாத சோகமிது, தாளாத வேதனையாம்
பிணியாக வந்தும்மைப் பிரித்திடவே இயலாமல்

(7) காலனும்நீர் உறங்கையிலே கள்வன்போல் வந்தானோ?
ஆலமரம் சாய்ந்ததுபோல் அதிர்ச்சியிது தாங்கவில்லை.
பாலர்கள் பலகோடி பசியார வழிசெய்தீர்,
ஓலமிட்டே அவரெல்லாம் உமைப்பிரிந்தே அழுகின்றார்.

(8) மோனநிலை தந்தருளும் மூகாம்பிகையன்னை
வானவரும் தானவரும் மானிடரும் போற்றவளை
ஆனபயன் இதுவென்றே அரும்பாத நிழல்தனிலே
தாமரைச் செய்தாளோ! தாயென்றால் மனங்கனியும்

(9) சீராள, யாள்வணங்கும் தெய்வத்தைத் தமிழென்றும்ம
தீராத அன்பொடு செப்புவறன்(டு), அவளாணை!
ஏராளத் தவம்செய்த எம். ஜி. ஆர் எனும்மணியே,
பாராளும் உள்ளமம் பலயுகங்கள் ஆயினுமே.

வேறு

புரட்சித் தலைவ, பொன்மனச் செம்மலே
தரணி புகழும் தலைமை யாள

ஈர மனத்தொடு ஏழைகள் உயர
வீரனாய் என்றும் வெற்றி சேர்த்தீர்.

பச்சிளம் பாலகர் பசிதீர்த்த புண்ணியம்
இச்சகத் திலன்போல் எவர்தாம் செய்தார்!

பாரிபோல் வள்ளலாய்ப் பல்லுயிர் காத்தீர்.
பாரினில் இப்புகழ் படைத்தவர் யாரே

காலனும் அஞ் சிடும் கடுந்தவம் அன்றோ
சாலவும் சிறந்தே திகழ்ந்தவும் வாழ்வு!

எப்படி உம்முயிர் இன்றவன் பறித்தான்?
செப்புவன், எளிற. இரந்திருப் பான்யமன்,

ஒளியார் மணியே, உம்முயி ரையுடனே
களிப்போடு அளித்தீர், களைத்ருப் பசியொடு

குழந்தை உருவம் கொண்டுவந் திருப்பான்,
வழங்கியே விட்டீர், வாழ்வினை ஐயா,

தாய்க்குரல் கேட்டால் தளர்வீர் என்றவள்
வாய்மொழி யேற்றே வந்திருப் பான். நீர்

உடன்சென் றுவிட்டீர். உலகோர் உய்ய
கடமை இருவெனக் கருத்தொடு தந்தீர்

எத்தனை திட்டம்! எவ்வளவு பணிகள்!
உத்தமர் எம். ஜி. ஆர் ஒருவரே என்னும்

வண்ணம் வாழ்ந்த வழிதனைக் காட்டினீர்
திண்ணமாய் ஓம்புவம் சிறந்தஉம் நெறியே.

-oOo-

குறிப்புகள்

மதராஸ் - பாண்டிச்சேரி - மணிலா வர்த்தகத்தொடர்புகள்

30.4.1738

'சங்கர்பாரித்' என்ற வியாபாரக் கப்பல் 1737 மார்ச்சில் வியாபாரத்தின் பொருட்டு மணிலா சென்று 30.4.1738 அன்று பாண்டிச்சேரிக்குத் திரும்பி வந்து சேர்ந்தது.

அக்காலத்தில் சென்னை நகரின் கோட்டைப் பகுதிகள் அனைத்தும் ஆங்கிலேயர் ஆட்சியிலும், சாந்தோம் பகுதி பிரஞ்சுக்காரர்கள் ஆட்சியிலும், இருந்தன. ஆனாலும், மதராஸ், மசூலிப்பட்டனம், பாண்டிச்சேரியிலிருந்து பிரஞ்சுக்காரர்கள் எடுத்துச் சென்ற பொருட்கள் அனைத்தும் நல்ல லாபத்தில் விற்பனை செய்யப்பட்டன. இக்கப்பலின் கேப்டன் மற்றும் சரக்கு ஏற்றிச் சென்றவர்களும் பிரஞ்சுக்காரர்களே

அவர்கள் மணிலாவில் விற்பனை செய்த பொருள் விவரங்கள்:

நீலவண்ணத்தில் ஆடைகளுக்கான துண்டுத் துணிகள் (Cut pieces)	50 சதம் இலாபம் விற்பனை
காடா துணிகள் - சாதா மற்றும் கட்டம்போட்டதுணிகள்	20 சதம் இலாப விற்பனை
மசூலிப்பட்டினம் (பந்தர்) வகைத்துணிகள்	80 சதம் இலாப விற்பனை
சந்திரநாடார் வகைத்துணிகள்	90 சதம் இலாப விற்பனை
பூவேலைப்பாடுள்ள துணிகள் மற்றும் பென்மெட்ராஸ் சின்டஸ் துணிகள்	20 முதல் 25 சதம் இலாப விற்பனை
பாண்டிச்சேரி சின்டஸ் மற்றும் திருப்பாப்புலியூர் துணிகள்	இவைகள் குறித்த விலையிலோ அல்லது நட்டத்திலோதான் விற்பனை ஆயின.

வியாபாரத்தில், 1736ஆம் ஆண்டில் விற்பனை விலையைவிட 1737ஆம் ஆண்டில் விற்பனை விலை அதிகம் என வியாபாரிகள் கணித்துள்ளனர். மெட்ராஸ் சின்டஸ் துணிகள் ஓராண்டுக் கடன் விற்பனை செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது

ஆதாரம்: ஆனந்தரங்க பிள்ளை நாட்குறிப்பு

நூல்விமர்சனம்

தமிழ் ஆட்சி மொழி - ஒரு வரலாற்று நோக்கு (1986)

நூலாசிரியர் :- திரு துரை சுந்தரேசன்.
தஞ்சாவூர்/தமிழ் பல்கலைக்கழக வெளியீடு, பக்கங்கள் 368
ரூ. 95/-

திரு துரை சுந்தரேசன், இ.ஆ.ப., அவர்களின் ஆராய்ச்சி ஆர்வத்தாலும், முயற்சியாலும், தமிழை ஆட்சிமொழியாகக் கொள்வது குறித்து, சென்னை சட்டமன்றத்தில், முக்கியமாக 1921லிருந்து 1956 வரை தெரிவிக்கப்பட்ட பல கருத்துக்களையும், இந்த புத்தக வாயிலாக அறிந்துகொள்ள இயலுகிறது. மக்கட் பிரதிநிதிகள் சட்டமன்றத்திலே இந்த பொருளுக்கு அளித்துள்ள முக்கியத்துவத்தையும் நன்கு உணர முடிகிறது. மிகவும் பராட்டத்தகுந்த முயற்சி.

தனது ஆராய்ச்சியில் இன்னும் பல பிரிவுகளைச் சேர்ந்த ஆவணங்களையும் தலைவர்கள் கருத்துக்களையும் சேர்த்துக்கொள்ள இயலாமல் போனது குறித்து ஆசிரியர் தனது குறையை வெளிப்படுத்தியிருக்கிறார். இந்த பொருள் குறித்து இன்னும் விரிவாக ஆராய்ச்சி செய்து எழுத இயலும் என்பது உண்மையே எனினும், திரு துரை சுந்தரேசனின் இந்த முயற்சி இத்தகைய விரிவான ஆராய்ச்சிகளுக்கு முன்னோடியாகவும், அடிப்படையாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.

சட்டமன்றப் பேச்சுக்களைத் தனித்தனியான தொடர்க் குறிப்புகளோடு வெளியிட்டிருந்தால், இன்னும் தெளிவாக இருந்திருக்கும் எனக் கருத இடமுள்ளது. மேலும், படலப்பிரிப்பிலும் (Chapterisation) கவனம் செலுத்தியிருக்கலாம். கருத்தாளர்களுடைய அட்டவணை (Index) ஒன்றும் சேர்த்திருந்தால், குறிப்புகள் எடுக்க உதவியாக இருக்கும்.

ஆய்வு செய்தவர்
கே. எஸ். வேங்கடராமன்,
உதவி பதிப்பாசிரியர்.

Essays on topics of
Social Sciences, Archives and matters of general interest are welcome in English or Tamil, for Publication in *AVANA AMUTHAM* subject to the Editor's discretion.

Research thesis or books may be sent to the Commissioner of Archives, Tamil Nadu Archives, Madras-600 008, for reviews to be included in the journal.

The Tamil Nadu Archives does not, however, accept any responsibility for the views expressed by the authors in their essays, etc.

Printed at Govt. Central Press, Madras-79